உம்முடைய வசனமே சத்தியம். யோவான் 17:17

# வேதாகமத்தின் அறுவடைகள்

## பாடம் - 30



## வேதாகமத்தின் மாபெரும் சத்தியங்கள்

# வேதாகமத்தின் மாபெரும் சத்தியங்கள்

பாடம் : # 30

## வேதாகமத்தின் அறுவடைகள்

**உங்கள் கவனத்திற்கு : ஒவ்வொரு வசனக்குறிப்பையும், தயவுசெய்து உங்கள் வேதாகமத்திலிருந்து முழுமையாக வாசித்தறியவும்.**

கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதர, சகோதரிகளே!

இன்று நாம் வேதத்தில் காணப்படுகிற அறுவடைகளை குறித்து ஆராய்வோம். ஆம் அதை பின்வரும் வசனத்தில் நாம் வாசிக்கிறோம்.

**மத்தேயு 13:39**

**"...அறுப்பு உலகத்தின் முடிவு..." (KJV மொழிபெயர்ப்பு)**

**"...அறுப்பு யுகத்தின் முடிவு..."(NIV மொழிபெயர்ப்பு)**

இங்கே **"யுகம்"** அல்லது **"உலகத்தின்"** முடிவில் ஒரு அறுவடை நடப்பதாக சொல்லப்படுகிறது.

### இந்த யுகம், அறுவடை எதை குறிக்கிறது ?

இந்த **"யுகம்"** அல்லது **"உலகம்"** என்பது மனிதனுக்கான தேவனுடைய மாபெறும் தெய்வீக திட்டத்தில் உள்ள காலப்பகுதியை குறிப்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

### அப்படியானால், இந்த "அறுவடை" எதை குறிக்கிறது ?

பொதுவாக அறுவடை என்பது விவசாயத்தில் ஒரு நிலத்தில் பயிரிட்டு, முடிவில் எதிர்ப்பார்க்கும் பலனை கூட்டி சேர்க்கும் கடைசி கட்ட வேலையை குறிக்கும்.



ஆனால் இந்த வசனம் பொதுவான விவசாயத்தை குறித்து பேசவில்லை என்பதை நாம் அறிவோம்.

இதுவரை வேதத்தை ஆராய்ந்து பார்க்க பழகியுள்ள நாம் **“சத்திய வசனத்தை நிதானமாய் பகுத்து” (2 தீமோத்தேயு 2:15)** பார்த்து இந்த பகுதியில் பயன்படுத்தப்பட்டுள்ள பாஷையை அடையாளம் கண்டு அதன் பொருளை கண்டுபிடிப்பது அவசியமாகும்.

அந்த வெளிச்சத்தில் இந்த வசனத்தை நாம் நிதானிக்கையில் இது சொல்லர்த்தமாக எழுதப்படாமல் **அடையாள பாஷையில்** எழுதப்பட்டுள்ளதை உணரலாம்.

இங்கு பயன்படுத்தப்பட்டுள்ள அடையாளத்தின் பொருளை புரிந்து கொள்வதற்கு முன்பு, அந்த அடையாளத்திலிருந்து சிலவற்றை நாம் கற்றுக்கொள்ள வேண்டும்.

**“அறுவடை”** என்பது நிலத்தில் இருந்து பலனை எதிர்ப்பார்க்கிற காலமாகும். **இது செய்யப்படும் கடைசி வேலையாகவும் உள்ளது.** ஆனால் அறுவடைக்கு முன்பு பயிரிடுவது சம்மந்தமான வேலைகள் இருப்பதை காண்கிறோம்.

முதலாவதாக பயிரிடுவதற்கு ஒரு நிலம் தேவைப்படுகிறது.

பின்பு நிலம் பண்படுத்தப்படுவதற்கான உழுதல் அவசியம்.

பின்பு விதை விதைப்பு நடைபெறுகிறது.

இதை தொடர்ந்து வளர்ச்சிக்குரிய காலம் வருகிறது. அதில் பயிருக்கு தேவையான தண்ணீர் மற்றும் சூரிய ஒளி முக்கிய பங்கு வகிக்கிறது.


இறுதியாக சில நாட்களுக்கு பின்பு விளைநிலத்திலிருந்து பலன் சேர்க்கப்படும் அறுவடை தொடர்கிறது. பின்பு அடுத்த விதைப்புக்கு நிலமானது மீண்டும் பண்படுத்தப்படுகிறது.



**விவசாயத்தில் காணப்படும் இந்த அம்சங்கள் தேவனுடைய தெய்வீக திட்டத்தில் வெவ்வேறு கால கட்டங்களில் (யுகங்களில்) நிறைவேறும் வேலைகளை அடையாளப்படுத்துவதற்கு வேத வசனத்தில் பயன்படுத்தப்படுகிறது.**

இதை பின்வரும் வசனப் பகுதியை வாசித்து உறுதிப்படுத்தலாம்.

**மத்தேயு 13:38**



**"...நிலம் உலகம்..."**

ஆம் இதன் மூலம் தேவனுடைய விளை நிலமாக இந்த உலகம் இருப்பதை காண்கிறோம்.

ஆனாலும் விவசாயிகள் தங்களுடைய விளை நிலம் முழுவதிலும் ஒரே சமயத்தில் பயிரிடுவதில்லை என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். சிலர் ஒருவித பயிரை ஒரு பகுதியிலும் மற்றதை வேறு பகுதியிலும் பயிரிடுவர். இன்னும் சிலர் விளை நிலத்தில் சிறு பகுதியை பயிரிட்டு மற்ற பகுதியை பயிரிடாமல் விட்டுவிடுவர்.

**இவையனைத்தும் அந்த விவசாயியின் விருப்பத்திற்கு ஏற்ப நடைபெறும். அது போலவே தேவன் அவருடைய தெய்வீக திட்டத்தை செயல்படுத்துகிறார்.**

ஆம் தேவனும் கூட **"யுகங்கள்"** மற்றும் **"உலகங்கள்"** என்றழைக்கப்படும் வெவ்வேறு காலப்பகுதிகளில் குறிப்பிட்ட சில வேலைகளை செயல்படுத்துகிறார்.

**தேவன் செயல்படுத்துகிற "வேலைகளை" நாம் எவ்வாறு கண்டுப்பிடிக்கக் கூடும் ?**

இதை நாம் அறுவடை திட்டத்தின் மூலம் புரிந்து கொள்ளலாம்.

வேதமானது மூன்று அறுவடைகளை பதிவு செய்துள்ளது. அவை

## யூத யுக அறுவடை

இதில் **"கோதுமை"** மற்றும் **"பதர்"** எனும் அடையாளங்கள் பயன்படுத்தப்படுகிறது.

## சுவிசேஷ யுக அறுவடை

இதில் "கோதுமை" மற்றும் "களைகள்" எனும் அடையாளங்கள் பயன்படுத்தப்படுகிறது.

## மேசியா யுக அறுவடை

இதில் **"செம்மறியாடு"** மற்றும் **"வெள்ளாடு"** எனும் அடையாளங்கள் பயன்படுத்தப்படுகிறது.

**இங்கு ஒவ்வொரு அறுவடையிலும் பயன்படுத்தப்படுகிற இரு அடையாளங்கள், ஒவ்வொரு காலக்கட்டத்திலும் பெறப்படும் லாபம் (பலன்) மற்றும் நஷ்டத்தை (அழிமானம்) அடையாளப்படுத்துகிறது.**

இப்பொழுது இந்த **"அறுவடைகள்"** ஒவ்வொன்றையும் தனித்தனியாக எடுத்து ஆராய்வதின் மூலம் அதை குறித்த விரிவான விளக்கங்களை புரிந்துகொள்ள முயற்சிக்கலாம். முதலாவதாக,

## யூத யுக அறுவடை

**இக்காலப்பகுதிக்குரிய அறுவடையில் நிலமாக இஸ்ரயேல் தேசம் இருந்தது.**

இந்த "அறுவடையானது" கோதுமையிலிருந்து பதரை பிரித்தெடுக்கும் வேலையாக இருந்தது.

### இது எதை குறிக்கும்?

இந்த "அறுவடையை" குறித்து வேத வசனங்களில் சொல்லப்பட்டிருப்பதை நாம் காண்போம்.

**மத்தேயு 3:11,12**

**"...எனக்குப்பின் வருகிறவர் என்னிலும் வல்லவராயிருக்கிறார்,.... அவர் பரிசுத்த ஆவியினாலும் அக்கினியினாலும் ஞானஸ்நானம் கொடுப்பார். தூற்றுக்கூடை அவர் கையில் இருக்கிறது; அவர் தமது களத்தை நன்றாய் விளக்கி, தமது கோதுமையைக் களஞ்சியத்தில் சேர்ப்பார்; பதரையோ அவியாத அக்கினியினால் சுட்டெரிப்பார் என்றான்."**



ஆம் இங்கு **தலைமை அறுவடையாளனாக** இருந்து **"கோதுமை"** மற்றும் **"பதரை"** பிரித்தெடுப்பவராக **இயேசு** இருப்பதை குறித்து சொல்லப்பட்டிருக்கிறது.

இங்கு **"பதர்"** மற்றும் **"கோதுமை"** குறித்து பார்க்கும்போது,

இது விதை இல்லாத கோதுமையின் வெளிப்புற தோல் அல்லது லேசான உமியை குறிக்கும். ஆம் "பதர்" என்பது வெளிப்புறத்தில் கோதுமையைப் போலிருந்து உட்புறத்திலோ பலனற்று காணப்படும்.

ஆனால் கோதுமையானது உள்ளும் புறமும் கோதுமை போன்றே இருக்கும்.



**"பதர்"**



**"கோதுமை"**

## யூத தேசத்தில் இந்த இரண்டு அடையாளங்களும் எதை குறிக்கின்றன ?

அடையாளத்தில் நாம் பார்த்தபடி **"கோதுமை"** என்பது உள்ளும் புறமும் கோதுமையாக இருப்பதாகும்.
**இது "உத்தம இஸ்ரயேலருக்கு" அடையாளமாகும்.**

அப்படிப்பட்ட இஸ்ரயேலருக்கு உதாரணமாக நாம் வாசிக்கையில்,

**யோவான் 1:47**

**"இயேசு நாத்தான்வேலைத் தம்மிடத்தில் வரக்கண்டு அவனைக்குறித்து: இதோ, கபடற்ற உத்தம இஸ்ரவேலன் என்றார்."**



ஆம் நாத்தான்வேலை குறித்து இயேசு பேசுகையில், வெளிப்புறத்தில் (நியாயப்பிரமாண பாரம்பரியத்தை கடைப்பிடிப்பதில்) மாத்திரமல்லமால், உள்ளும் (இருதயத்திலும்) “உத்தம இஸ்ரயேலன்” என்று குறிப்பிடுகிறார்.

ஆம் அவர் **“கோதுமைக்கான”** உதாரணமாக இருந்தார்.

**“பதர்”** என்பது வெளிப்புறத்தில் (நியாயப்பிரமாண பாரம்பரியத்தை கடைப்பிடிப்பதில்) மாத்திரம் யூதனாயிருந்து, உள்ளாக (இருதயத்தில்) வெறுமையாயிருந்த யூதர்களை குறிக்கிறது.

**ஆம் இவர்கள் வெளிப்புறத்தில் யூதர்களை போன்று தோற்றமளித்து “இருதயத்தில்” யூதர்கள் அல்லாதவர்களாக இருந்தனர்.**



இதில் மிகப்பெரிய ஆச்சரியம் என்னவெனில் பெறும்பான்மையான மத தலைவர்கள் மற்றும் போதகர்கள் இப்படிப்பட்ட வகுப்பாராக இருந்ததை வாசிக்கிறோம்.

**மத்தேயு 23:13**

**"மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, மனுஷர் பிரவேசியாதபடி பரலோகராஜ்யத்தைப் பூட்டிப்போடுகிறீர்கள்; நீங்கள் அதில்**

**பிரவேசிக்கிறதுமில்லை பிரவேசிக்கப் போகிறவர்களைப் பிரவேசிக்க விடுகிறதுமில்லை."**

ஆம் உண்மையில் இவர்களே **"பதர்"** என்ற அடையாளத்தின் மூலம் குறிப்பிடப்படுபவர்கள் ஆவர்.

இதன்மூலம் **"கோதுமை"** மற்றும் **"பதர்"** என்பது இஸ்ரயேலுக்குள் காணப்பட்ட இருவிதமான யூதர்களுக்கு அடையாளமாக இருப்பதை காண்கிறோம்.

**யோவான் 4:35,36**


**"அறுப்புக்காலம் வருகிறதற்கு இன்னும் நாலுமாதம் செல்லும் என்று நீங்கள் சொல்லுகிறதில்லையா? இதோ, வயல்நிலங்கள் இப்பொழுதே அறுப்புக்கு விளைந்திருக்கிறதென்று உங்கள் கண்களை ஏறெடுத்துப்பாருங்கள் என்று நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். விதைக்கிறவனும் அறுக்கிறவனுமாகிய இருவரும் ஒருமித்துச் சந்தோஷப்படத்தக்கதாக, அறுக்கிறவன் கூலியை வாங்கி, நித்திய ஜீவனுக்காகப் பலனைச் சேர்த்துக்கொள்ளுகிறான்."**

இயேசுவின் இந்த வார்த்தைகளை குறித்து அநேகர் ஆச்சரியப்பட்டதுண்டு. இவர்கள் இயேசு இஸ்ரயேலின் விளை நிலங்களை குறித்து ஏன் பேச வேண்டும் என்று ஆச்சரியப்பட்டனர்.

**ஆனால், இயேசு யூத யுகத்தில் முடிவுக்கு வந்த தேவனுடைய வேலையை குறித்தே பேசினார் என்று இன்று நாம் உணர்கிறோம்.**



**மேலும், இந்த விளை நிலத்தில் "விதைகளை" விதைத்தது யார் ?**



**அந்த "விதைகள்" எதை குறிக்கிறது ?**

**மேலும் அங்கு நடைப்பெற்ற "உழுதல்" எதை குறிக்கும் ?**

இதற்கான பதிலை பின்வரும் வசனத்தில் வாசிக்கலாம்-


**யோவான் 4:38**

**"நீங்கள் பிரயாசப்பட்டுப் பயிரிடாததை அறுக்க நான் உங்களை அனுப்பினேன், மற்றவர்கள் பிரயாசப்பட்டார்கள், அவர்களுடைய பிரயாசத்தின் பலனை நீங்கள் பெற்றீர்கள் என்றார்."**

## “உழுதல்”


விதைப்புக்கு முன் அங்கு நடைபெற்ற உழுதலை கவனிக்கும்போது, உழுதல் என்பது பொதுவாக கடினமான நிலத்தை ஏர் என்று அழைக்கப்படும் கூர்மையான கருவியை கொண்டு பண்படுத்தி அதன்மூலம் விதைக்கப்படும் விதையை நிலம் உள்வாங்கும் நிலைக்கு ஆயத்தப்படுத்துவதை குறிக்கும்.





இஸ்ரயேல் தேசமானது தேவனுடைய வார்த்தைகளாகிய **“விதைகளை”** உள்வாங்கிக்கொள்ள எகிப்தில் அவர்கள் பெற்ற **அடிமைத்தன அனுபவங்களின்** மூலம் ஏற்கனவே **“உழப்பட்டு”** அல்லது ஒட்டுமொத்தமாக ஆயத்தப்பட்டிருந்தனர். இது இஸ்ரயேலர்களின் இருதயத்தில் அல்லது **“நிலத்தில்”** ஏற்பட்ட **“உழுதலுக்கு”** இணையான அனுபவமாகும்.

## "விதைகள்-விதைத்தவர்"



இங்கு **விதைத்தவர்கள் (...“மற்றவர்கள்”...)** என்பது தீர்க்கதரிசிகள் மற்றும் பரிசுத்தமான ஜனங்களை குறிக்கும். இவர்கள் இஸ்ரயேலின் மேசியாவை குறித்தும், தேவனுடைய ராஜ்யத்தில் இவர்களை கருவியாகக் கொண்டு ஆசீர்வாதம் வருவதை குறித்த **“விதைகளாகிய” தீர்க்கதரிசன** மற்றும் **வாக்குத்தத்த வசனங்களை** விதைகளாக விதைத்தனர்.

### இதை தொடர்ந்து நிறைவேறின காரியம் என்ன?

இதற்கு பின்பு இந்த “விதைகளுக்கு” வளர்ச்சிக்குரிய காலம் அனுமதிக்கப்பட்டு. யூத யுகத்தில் தேவனுடைய தெய்வீக பாதுகாப்பு

மற்றும் வழிநடத்துதல் மற்றும் மீட்பு என்ற **"சூரிய ஒளியை"** ஏற்ற சமயங்களில் இஸ்ரயேல் தேசம் பெற்றது.

பின்பு அவர்கள் **அறிவுறுத்தல், எச்சரிக்கை** மற்றும் **ஊக்கமளிக்கிற** தேவனுடைய வார்த்தைகளாகிய "தண்ணீரை" ஏசாயா முதல் மல்கியா வரையிலான தீர்க்கதரிசிகளின் மூலமாக தொடர்ந்து பெற்றனர். இவ்விதமாக அவர்களுடைய சரியான வளர்ச்சிக்குத் தேவையான **"சூரிய ஒளி" மற்றும் "தண்ணீர்"** கொடுக்கப்பட்டது.

இதன் மூலம் "அறுவடைக்கான" காலம் வந்தபொழுது இஸ்ரயேலர் மத்தியில் பிரதான அறுவடையாளராக இயேசு வந்திருந்தார்.



இந்த அறுவடை நிறைவேற்றப்படும் விதம் குறித்து நாம் வாசிக்கையில்,

**மத்தேயு 3:12**

**"தூற்றுக்கூடை அவர் கையில் இருக்கிறது; அவர் தமது களத்தை நன்றாய் விளக்கி, தமது கோதுமையைக் களஞ்சியத்தில் சேர்ப்பார்; பதரையோ அவியாத அக்கினியினால் சுட்டெரிப்பார் என்றான்."**

**இங்கு இயேசுவின் கைகளில் இருப்பதாக சொல்லப்படும் "தூற்றுக்கூடை" எதை குறிக்கும் ?**

இந்த தூற்றுக்கூடை லேசான பதரை காற்றின் மூலம் கனமான கோதுமை மணியிலிருந்து பிரிப்பதாகும்.



அதுபோல, இயேசு போதித்த சத்தியம் இஸ்ரயேலின் யூதர்கள் மத்தியில் தாக்கத்தை ஏற்படுத்தி உண்மையான **"கோதுமையை"** (அவருடைய வார்த்தைகளுக்கு செவிசாய்த்து எல்லாவற்றையும் விட்டு அவரை பின்பற்றி அவருடைய சீஷர்களாக அவரோடுகூட இருந்த) **உத்தம இஸ்ரயேலரை** பிரித்ததை குறிக்கும்.

**இவர்களே அந்த "கோதுமை" வகுப்பார் ஆவர்.**



இஸ்ரயேல் தேசத்தில் மீதியானவர்கள் இயேசுவையும் அவருடைய போதனையாகிய சத்தியத்தையும் புறக்கணித்து அதன்மூலம் தாங்கள் உத்தம இஸ்ரயேலர் அல்ல மாறாக வெளித்தோற்றத்தில் மாத்திரம் இஸ்ரயேலர் என்பதை நிரூபித்தார்கள். ஆம் இவர்களே பெயரளவில் மாத்திரம் இஸ்ரயேலரானவர்கள் ஆவர்.

**இவர்களே அந்த "பதர்" வகுப்பார்.**



**இந்த அறுவடையில் "கோதுமை" மற்றும் "பதருக்கு" சம்பவித்தது என்ன ?**

இதை குறித்து நாம் வாசிக்கையில்,

**மத்தேயு 3:12**

**"...அவர் தமது களத்தை நன்றாய் விளக்கி, தமது கோதுமையைக்**

**களஞ்சியத்தில் சேர்ப்பார்; பதரையோ அவியாத அக்கினியினால் சுட்டெரிப்பார் என்றான்."**

இஸ்ரயேலரின் மத்தியில் இருந்த இந்த “கோதுமை” வகுப்பார் இயேசுவின் மூலம் “உத்தம இஸ்ரயேலர்களாக” பிரிக்கப்பட்டு முதலில் யூதர்களுக்கு கொடுக்கப்பட்டதாக நாம் வாசிக்கும் அழைப்பில் இயேசு கிறிஸ்துவின் சபையாகிய “களஞ்சியத்தில் சேர்க்கப்பட்டனர்”-



**ரோமர் 2:9 - "முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும்...."**

உண்மையில் இயேசு கிறிஸ்துவின் சபையில் முதல் அங்கத்தினர்களாக யூதர்களே இருந்தனர். பன்னிரெண்டு அப்போஸ்தலர்களும் யூதர்களே. மேலும் பெந்தெகொஸ்தே நாளில் முதன்முதலாக “விசுவாசித்ததும்” யூதர்களே என்று வாசிக்கிறோம்.

**அப்போஸ்தலர் 2:41**

**"அவனுடைய வார்த்தையைச் சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள். அன்றையத்தினம் ஏறக்குறைய மூவாயிரம்பேர் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள்."**

மேலும் இவர்களின் எண்ணிக்கை “ஐயாயிரமாக” உயர்ந்ததை **அப்போஸ்தலர் 4:4**-ல் வாசிக்கிறோம். ஆம் இவர்களே இஸ்ரயேலிருந்து **“களஞ்சியத்தில்”** சேர்க்கப்பட்ட **“கோதுமை”** ஆவர்.

**பின்பு “பதர்” வகுப்பாருக்கு என்ன சம்பவித்தது ?**

இதை குறித்து வாசிக்கையில்,

**"...பதரையோ அவியாத அக்கினியினால் சுட்டெரிப்பார் என்றான்."**

இங்கு **"கோதுமை"** மற்றும் **"பதர்"** அடையாளத்தில் சொல்லப்பட்டிருப்பது போல **"அவியாத அக்கினியில்"** சுட்டெரிப்பதும் அடையாளத்தில் சொல்லப்பட்டிருப்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும்.

**இப்படியிருக்க இந்த அடையாளம் எதை குறிக்கும் ?**

வேதத்தில் "அக்கினி" என்பது தேவனுடைய நியாயத்தீர்ப்புக்கு அடையாளமாகும்.**(தானியேல் 7:10 / ஏசாயா 66:15,16 )**



ஆம் தேவனுடைய நியாயத்தீர்ப்பு என்பது பாவத்தை அழிக்கிறதும் மனிதருடைய இருதயத்தை சுத்திகரிப்பதுமான இரு தன்மையை கொண்டுள்ளது.



இந்த இரு தன்மைகளையும் "அக்கினி" பெற்றிருப்பதை ஒருவர் காணலாம்.

இங்கு "பதர்" என்பது இஸ்ரயேல் தேசத்தையும் "அக்கினி" என்பது இயேசு தம்முடைய வார்த்தைகளில் – **"உங்கள் வீடு உங்களுக்கு பாழாக்கி விடப்படும்" (மத்தேயு 23:38)** என்று சொல்லி **கிபி 33-ல்** துவங்கி இஸ்ரயேல் மீது நிறைவேறின **மாபெரும் உபத்திரவ காலமாகிய நியாயத்தீர்ப்பையும் குறிக்கும்.**

இது கிபி 70-ஆம் வருடம் இஸ்ரயேலர் உலக நாடுகள் அன்னைத்திலும் சிதறடிக்கப்பட்டு, தேசமானது பாழாக்கப்பட்டதில் முடிவுக்கு வந்ததாக வாசிக்கிறோம்.



**சகரியா 7:14**

**"அவர்கள் அறியாத புறஜாதிகளுக்குள்ளே அவர்களைப் பறக்கடித்தேன்; அதினால் அவர்கள் பின்வைத்துப்போன தேசம் போக்குவரத்தில்லாமல் பாழாய்ப்போயிற்று; அவர்கள் இன்பமான தேசத்தைப் பாழாய்ப்போகப்பண்ணினார்கள் என்றார்."**

**இங்கு “அவியாத அக்கினி” எதை குறிக்கும் ?**

**மத்தேயு 27:25**

**"அதற்கு ஜனங்களெல்லாரும்: இவனுடைய இரத்தப்பழி எங்கள் மேலும் எங்கள் பிள்ளைகள் மேலும் இருப்பதாக என்று சொன்னார்கள்."**

இந்த “அவியாத அக்கினி” என்பது இஸ்ரயேல் தப்பமுடியாதபடி அதன்மேல் நிறைவேறி தீர்ந்த முடிவில்லாத நியாயத்தீர்ப்புகளை குறிக்கும்.

நாம் இப்பொழுது “இரண்டாவது அறுவடையாக” வேதத்தில் சொல்லப்பட்டுள்ளதை காண்போம்.

## சுவிசேஷ யுக அறுவடை

இங்கு நிலம் என்பது உலகமனைத்திலும் உள்ள கிறிஸ்தவ தேசங்களை குறிக்கும்.

இந்த அறுவடை “கோதுமை” மற்றும் “களைகள்” மத்தியில் நடக்கும் பிரித்தெடுத்தலாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.



## இது எதை குறிக்கும் ?

இந்த "அறுவடையை" குறித்து விரிவாக பின்வரும் வசனத்தில் வாசிக்கலாம்.

## மத்தேயு 13:30

**"....முதலாவது களைகளைப்பிடுங்கி, அவைகளைச் சுட்டெரிக்கிறதற்கு கட்டுகளாகக் கட்டுங்கள்; கோதுமையையோ என் களஞ்சியத்தில் சேர்த்துவையுங்கள் என்பேன் என்று சொன்னான் என்றார்."**

ஆம் முந்தைய அறுவடையில் **"கோதுமை" – உண்மை கிறிஸ்தவர்களாகிய யூதர்களை** குறித்ததுபோல். இங்கு **"கோதுமை" – உண்மை கிறிஸ்தவர்களாகிய புறஜாதியரைக்** குறிக்கிறது.

## இப்படியிருக்க, "களைகள்" எதை குறிக்கிறது ?

இதை குறித்து நாம் வாசிக்கையில்,

### மத்தேயு 13:24-30

**"வேறொரு உவமையை அவர்களுக்குச் சொன்னார்: பரலோகராஜ்யம் நல்ல நிலத்தில் விதைக்கப்பட்ட நல்ல விதையை விதைத்த மனுஷனுக்கு ஒப்பாயிருக்கிறது. மனுஷர் நித்திரை பண்ணுகையில் அவனுடைய சத்துரு வந்து, கோதுமைக்குள் களைகளை விதைத்துவிட்டுப் போனான். பயிரானது வளர்ந்து கதிர் விட்டபோது, களைகளும் காணப்பட்டது. வீட்டெஜமானுடைய வேலைக்காரர் அவனிடத்தில் வந்து: ஆண்டவனே, நீர் உமது நிலத்தில் நல்ல விதையை விதைத்தீர் அல்லவா? பின்னை அதில் களைகள் எப்படி உண்டானது என்றார்கள். அதற்கு அவன்: சத்துரு அதைச் செய்தான் என்றான். அப்பொழுது வேலைக்காரர்: நாங்கள் போய் அவைகளைப் பிடுங்கிப்போட உமக்குச் சித்தமா? என்று கேட்டார்கள். அதற்கு அவன் வேண்டாம், களைகளைப் பிடுங்கும்போது நீங்கள் கோதுமையையுங்கூட வேரோடே பிடுங்காதபடிக்கு இரண்டையும் அறுப்பு மட்டும் வளரவிடுங்கள். அறுப்புக்காலத்தில் நான் அறுக்கிறவர்களை நோக்கி: முதலாவது களைகளைப்பிடுங்கி, அவைகளைச் சுட்டெரிக்கிறதற்கு கட்டுகளாகக் கட்டுங்கள்; கோதுமையையோ என் களஞ்சியத்தில் சேர்த்துவையுங்கள் என்பேன் என்று சொன்னான் என்றார்."**

இங்கு இந்த உவமையில் சுவிசேஷ யுகத்தில் கிறிஸ்துவின் சபை அதன் பிறப்பு மற்றும் வளர்ச்சியின் வரலாறு கொடுக்கப்பட்டுள்ளது.

**மேலும், இந்த "நிலம்" இருவிதமான விதைகளால் பயிரிடப்பட்டுள்ளதை நாம் கவனிக்க வேண்டிய மிக முக்கியமான அம்சமாகும்.**

வசனம் 24 –ல்

**உள்ள “நல்ல விதையானது” “கோதுமையை” விளைவிக்கிறது**

வசனம் 24 –ல்

**உள்ள “சத்துரு” விதைத்த “விதையானது”, “களைகளை” விளைவிக்கிறது.**

**இங்கு “நல்ல விதை” என்பது எதைக் குறிக்கும் ?**

இதற்கான பதிலை பின்வரும் வசனத்தில் வாசிக்கலாம்,

**லூக்கா 8:11 - “...நல்ல விதைகள் தேவனுடைய வார்த்தைகள்...”**

ஆம் அது **“ராஜ்யத்தின் சுவிசேஷமாகும்”. (மத்தேயு 9:35)**

இங்கு “ஒரு மனுஷன்” விதைத்த “நல்ல விதை” என்பது, கிறிஸ்தவ சபையை ஸ்தாபித்தவராகிய நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷ ஊழியத்தை குறிக்கும்.




இவர் தம்முடைய ஊழியத்தை **“காணாமல் போன ஆடுகளாகிய இஸ்ரயேல்...” (மத்தேயு 15:24)** தேசத்தோடு கட்டுப்படுத்தியிருந்தாலும், இஸ்ரயேலுக்கு வெளியே சுவிசேஷத்தை எடுத்துச் செல்லும் பொறுப்பை தம்முடைய **அப்போஸ்தலர்களுக்கும் சீஷர்களுக்கும்** ஒப்படைத்ததை வாசிக்கிறோம்.

**அப்போஸ்தலர் 1:8**

**"பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார்."**

**ஆம் இவர்களே அந்த “மனுஷன்” மூலம் குறிக்கப்படுகிற “மனிதர்கள்” ஆவர்**





இவர்கள் **"மகா பரிசுத்தமான விசுவாசம்"** (யுதா 20) – என்றழைக்கப்படும் வேதத்தின் சத்திய போதனைகள் மற்றும் சுவிசேஷத்தை பிரசங்கித்தனர். ஆனால் காலப்போக்கில் இந்த **"மனுஷர் நித்திரை"** அடைந்தனர் அல்லது வேறுவிதத்தில் சொல்லப்போனால் "அப்போஸ்தலர்கள்" **மரித்தனர்.**

இப்படியிருக்க "மனிதர்கள் நித்திரையடைந்தபோது" வந்த சத்துரு யார்? இதற்கான பதிலை நாம் வாசிக்கையில்,



**மத்தேயு 13:39 - "அவைகளை விதைக்கிற சத்துரு பிசாசு...."**

**ஆம் அது பிசாசாகிய – சாத்தானே!**

இது "மனுஷர் நித்திரையடைந்த" பின்பு அல்லது அப்போஸ்தலர்களின் மரணத்திற்கு பின்பு முதலாம் நூற்றாண்டில் ஆரம்பகால சபையின் வரலாற்றில் பிசாசானவன் நடப்பித்ததை சித்தரிக்கிறது.

ஆம், "கோதுமை" அல்லது சபை என்ற அதே நிலத்தில் பிசாசானவன் விதைத்த "விதையானது" **கள்ள போதனை** மற்றும் **தவறான கருத்துக்கள்** ஆகும்.

**ஒவ்வொரு சத்தியமும் முறையாக தவறான உபதேசத்தின் மூலம் இரண்டகம் பண்ணப்பட்டது.**

இது **1 தீமோத்தேயு 4:1**-ல் அப்போஸ்தலன் பவுல் மூலம் தீர்க்கதரிசனமாக உரைக்கப்பட்டுள்ளது.

**"பிற்காலங்களிலே மனச்சாட்சியில் சூடுண்ட பொய்யருடைய மாயத்தினாலே சிலர் வஞ்சிக்கிற ஆவிகளுக்கும் பிசாசுகளின் உபதேசங்களுக்கும் செவிகொடுத்து, விசுவாசத்தைவிட்டு விலகிப்போவார்கள்."**

ஆம் இவை யாவும் முந்தைய வகுப்புகளின் மூலம் நாம் ஏற்கனவே அறிந்திருக்கிற
**கள்ள உபதேசங்களாகிய... அழியாத மனித ஆத்துமா, நரகம், திரித்துவமாக இருக்கிற தேவன் மற்றும் இது போன்ற அநேக; வேதத்தில் காணப்படாத கள்ளபோதனைகளாகும்.**

இவ்விதமாக இயேசுகிறிஸ்துவினாலும், தேவனுடைய பரிசுத்த ஆவியினாலும் உண்டான சத்திய போதனைகள் மற்றும் சுவிசேஷம் மாற்றப்பட்டது. இதை அப்போஸ்தலனாகிய பவுல் பின்வரும் வசனத்தில் தெளிவாக போதிக்கிறார்.

## 2 கொரிந்தியர் 11:4

**"எப்படியெனில், உங்களிடத்தில் வருகிறவன் நாங்கள் பிரசங்கியாத வேறொரு இயேசுவைப் பிரசங்கித்தானானால், அல்லது நீங்கள் பெற்றிராத வேறொரு ஆவியையும், நீங்கள் ஏற்றுக்கொள்ளாத வேறொரு சுவிசேஷத்தையும் பெற்றீர்களானால், நன்றாய்ச் சகித்திருப்பீர்களே."**

**"உண்மையான"** **இயேசு** மறைந்து **"வேறோரு இயேசு"** போதிக்கப்பட்டார்.



**1.** ஆம், சர்வவல்லமையுள்ள தேவனுடைய குமாரனாகிய இயேசுவை **"மரியாளின் குமாரனாகவும்"**, பிதாவிடம் நாம் சேருவதற்கான "வழியாய்" தான் இருப்பதாக **( நானே வழியும், சத்தியமும் ஜீவனுமாய் இருக்கிறேன். என்னையல்லாமல்...) இயேசுகிறிஸ்து பிரசங்கித்திருக்க அவரையே "இயேசப்பா" என்றும் போதிக்கின்றனர்.**

**2.** "ஒரே பேறான குமாரனும்", "சர்வ சிருஷ்டிக்கும் முந்தின பேறுமானவரும்"- பரலோகப் பிதாவின் நேரடியான படைப்பில் **முதல் சிருஷ்டியான** இவர் **"தேவர்கள்"** பற்றின **திரித்துவத்தில் இரண்டாவது நபராக** மாற்றப்பட்டார்.



**3.** "சகல சத்தியத்திலும் வழிநடத்துகிற" **"உண்மையான" பரிசுத்த ஆவி** மறைந்து **வலிப்பு நோய், சிரிப்பு** மற்றும் **வாந்தியையும்** வரவழைக்கும் ஆவியாக பரிசுத்த ஆவி காணப்பட்டது.

**4.** இராஜ்யத்தைப் பற்றின "உண்மையான" சுவிசேஷம் மறைக்கப்பட்டு நித்திய தண்டனையாகிய **"நரகத்திலிருந்து"** ஆத்துமாக்களை இரட்சிக்கும் சுவிசேஷமாகிய **"வேறொரு சுவிசேஷம்"** போதிக்கப்பட்டது.

ஆம் எல்லா ஆத்துமாக்களும் ஏற்கனவே இரட்சிக்கப்படும்படி, கல்வாரி சிலுவையில் தரப்பட்ட இயேசுவின் பலியின் மூலம் ஜீவனுக்கான உயிர்த்தெழுதல் உறுதியளிக்கப்பட்டிருக்க **(1 கொரிந்தியர் 15:22)** இன்றும் நரக போதனை நடைபெறுகிறது.

மேலும் கர்த்தருடைய வார்த்தையாகிய **யோவான் 17:3-ல்** தெளிவாக சொல்லப்பட்டிருந்தும், ஆண்டவராகிய **இயேசுவை** – **"ஒன்றான மெய் தேவன்"** என்று போதிக்கும் **"இயேசு கிறிஸ்துவை பற்றின சுவிசேஷம்"** போன்ற இன்னும் அநேகமான உபதேசங்கள் உபதேசிக்கப்பட்டு வருகிறது.



இவைகள் யாவுமே கிறிஸ்தவ சபை அல்லது "நிலத்தில்" பிசாசானவன் விதைத்த கள்ளபோதனைகளாக இருந்து "களைகள்" பிறப்பிக்கக்கூடியதாக இருக்கிறது.

**இங்கு சொல்லப்பட்டுள்ள "களைகள்" பற்றின அடையாளம் எதை குறிக்கும் ?**

இந்த **"களைகள்"** என்பது பார்ப்பதற்கு கோதுமைச் செடிகளைப் போன்றே தோற்றமளிக்கும் செடிகளாகும். இப்படிப்பட்ட **"களைகள்"** நிறைந்த நிலத்தை சாதாரணமாக பார்க்கும் ஒருவர் அதை கோதுமை வயலாகவே நினைப்பார். ஆனால் நிஜத்தில் அவை கோதுமை அல்ல.

**அதை கூர்ந்து கவனிக்கையில் அங்குள்ள வித்தியாசங்கள் வெளிப்படும்.**

அதனுடைய மணிகள் கோதுமையைப் போன்று பொன் நிறமாக இல்லாமல் **கறுப்பு நிறத்தில்** இருக்கும்.





கோதுமை மணியைப் போல் கனமாக இல்லாமல் **லேசான மணிகளை** கொண்டிருக்கும். லேசான மணிகளைக் கொண்டிருப்பதால் இந்த **களைகள் காற்றை எதிர்த்து செங்குத்தாக நிற்கும்**. ஆனால் கோதுமைச் செடிகளோ காற்றுக்கு வணங்கி வளைந்திருக்கும்.

இந்த களை மணிகள் உட்கொள்ளப்படுகையில் விஷமுள்ளதாக இருந்து வாந்தி வரப்பண்ணும். இது ஜீவனுக்கான ஆகாரமாயிருக்கும் கோதுமை மணியைப் போல இருப்பதில்லை.

## இவையனைத்தும் எதைக் குறிக்கும் ?

இது **“நிலமாகிய”** – **சபையானது “கோதுமை”** மற்றும் **“களை”** எனப்படும் இரு விதமான கிறிஸ்தவர்களை கொண்டிருப்பதை அடையாளமாக குறிக்கிறது.




என்பது தேவனுடைய வார்த்தையாகிய – வேதத்திற்கு கீழ்ப்படுவதில் “கிறிஸ்துவின் சிந்தையை” பெற்றிருந்து சத்தியத்தை அடிப்படையாக கொண்ட விசுவாசத்தை உடைய உண்மைக் கிறிஸ்தவர்களைக் குறிக்கும்.




என்பது “வெளிப்புற தோற்றத்திலும்” பெயரளவிலும் மாத்திரம் கிறிஸ்தவர்களாக இருக்கும் பொய்க் கிறிஸ்தவர்களைக் குறிக்கும்.

இவர்களை உற்று கவனித்தால் களைகளில் காணப்பட்ட பின்வரும் வித்தியாசங்களை இவர்கள் பெற்றிருப்பது வெளிப்படும்.

### "கருப்பு நிற மணிகள்"



இந்த **"விதை"** தேவனுடையதாக (**"பொன் நிறம்"**) இல்லாமல் பிசாசானவனுடையதாகிய (**"கருப்பு நிறம்"**) கள்ள உபதேசங்கள் மற்றும் நம்பிக்கைகளை குறிக்கும்.

### "லேசான மணிகள்"

இந்த **"விதை"** அல்லது போதனைகள் வசனங்கள் மற்றும் சத்தியத்தின் ஆதாரம் இல்லாமல் இருப்பதை குறிக்கிறது. இந்த போதனைகள் வேதவசனங்களில் காணப்படுவதில்லை.

### "காற்றை எதிர்த்து நிற்குதல்"

இந்த உபதேசங்கள் உபத்திரவங்கள் மத்தியில் பொறுமையோடு சகித்து "வளைந்து" கொடுக்கும் தன்மையை ஒருவருக்குள் ஏற்படுத்தும். "கிறிஸ்துவின் ஆவியை" தராமல் மாறாக "தீமைக்கு தீமை" (ரோமர் 12 : 17) செய்யும் எதிர்த்து நிற்கிற ஆவியை தருவதை குறிக்கும்.



## “வாந்தி வர பண்ணும் விஷத்தன்மையுள்ள மணிகள்”

இது இந்த **“பிசாசானவனுடைய உபதேசங்கள்”** உட்கொள்ளப்படும்பொழுது அல்லது **ஏற்றுக்கொள்ளப்படும்பொழுது** ஜீவனை அளிப்பதற்கு பதிலாக **“விஷத்தன்மையுள்ள”** இந்த **கள்ள உபதேசங்களால்** “வாந்தி பண்ணுதலாகிய” – அதாவது சத்திய வசனங்களை அடிப்படையாக கொண்டிராத உபதேசங்களை நியாயப்படுத்துவதற்கு பேசப்படும் **சலிப்புண்டாக்குகிற (அழுகிய) அதிகப்படியான வார்த்தைகளுக்கு** காரணமாக இருக்கிறது.

இவ்விதமாக இன்றைய சபையின் நிலையை குறித்து தீர்க்கதரிசனத்தை நாம் வாசிக்கையில்,

**ஏசாயா 28:8**

**"போஜனபீடங்களெல்லாம் வாந்தியினாலும் அசுத்தத்தினாலும் நிறைந்திருக்கிறது; சுத்தமான இடமில்லை."**

### இது எதை குறிக்கும் ?

நிச்சயமாக இந்த “போஜனபீடங்கள்” சொல்லர்த்தமான உணவை உட்கொள்ளும் சொல்லர்த்தமான மேஜைகளை குறிப்பதில்லை.

மாறாக இது ஆவிக்குரிய உணவு பரிமாறப்படும் **“மேஜையை”** குறிக்கும். ஆம் இது ஆவிக்குரிய உணவு பரிமாறப்பட்டு உட்கொள்ளப்படும் இடமாகிய பல விதமான **சபைகளை** குறிக்கும்.

**இது இன்றைய சபைகளில் கற்பிக்கப்படும் போதனைகள் மற்றும் உபதேசங்கள் குறித்த தீர்க்கதரிசனமாகும்.**



ஆம் இந்த “வாந்தி” என்பது "ஜீரணிக்கப்படாத உணவு” அல்லது “புரிந்துகொள்ளப்படாத அல்லது புரிந்துகொள்ளமுடியாத” உபதேசங்களை குறிக்கும்.

இந்த இருவிதமான கிறிஸ்தவர்கள் அறுவடை காலத்தில் பிரிக்கப்பட வேண்டியதை குறித்து பின்வரும் வசனத்தில் வாசிக்கிறோம்.

**மத்தேயு 13:30**

**"அறுப்புக்காலத்தில் நான் அறுக்கிறவர்களை நோக்கி: முதலாவது களைகளைப்பிடுங்கி, அவைகளைச் சுட்டெரிக்கிறதற்கு கட்டுகளாகக் கட்டுங்கள்; கோதுமையையோ என் களஞ்சியத்தில் சேர்த்துவையுங்கள் என்பேன் என்று சொன்னான் என்றார்."**

ஆம் இது “கோதுமையானது களைகளிலிருந்து” பிரித்தெடுக்கப்படுவது போல. உண்மை கிறிஸ்தவர்கள் பெயர் கிறிஸ்தவர்களிலிருந்து பிரிக்கப்படுவதைக் குறிக்கும்.

இது “அறுப்பவர்கள்” மூலம் செய்யப்படுவதாக நாம் வாசிக்கிறோம்.

**“அறுப்பவர்கள்” என்பது இங்கு யாரை குறிக்கும் ?**

**மத்தேயு 13:39**

**“...அறுக்கிறவர்கள் தேவதூதர்கள்...”**

இங்கு "**தேவதூதர்கள்**" என்ற வார்த்தை ஆங்கிலத்தில் "**angel**" என வருகிறது.

மேலும், **“angel”** (தேவதூதர்கள்) என்ற வார்த்தை **“aggelos”** (**ஸ்ட்ராங்ஸ் கிரேக்க எண்** 32) எனும் ஆவிக்குரிய அல்லது மாம்ச தூதுவர்களை பொருளாக கொண்டிருக்கும் வார்த்தையிலிருந்து வருகிறது.

இங்கு தூதுவர்கள் அல்லது அறுப்பவர்கள் செய்யும் வேலை, இது இயேசு தம்முடைய முதலாம் வருகையில் நிறைவேற்றிய முதலாவது அறுவடையில் அவர் பயன்படுத்தின கருவியாகிய – **“தூற்றுக்கூடைக்கு”** ஒத்த வேலையாகும் (கருவியாகும்). அது அவருடைய வார்த்தைகள் அல்லது தேவனுடைய வார்த்தைகளாகிய – சத்தியமாகும்.




இவ்விதமாக இங்கும் **“தூதுவர்கள்”** அல்லது **“தூதர்கள்” இரண்டாம் அறுவடையின்** பிரித்தெடுத்தலை நிறைவேற்றுவதற்கு அதே **சத்தியத்தை – தேவனுடைய வார்த்தைகளை** பயன்படுத்துகின்றனர். சுவிசேஷ யுகத்தின் முடிவாகிய தற்சமயத்தில் இந்த வேத சத்தியங்கள் “புதிய” சத்தியங்களாக தோற்றமளித்தாலும் உண்மையில் இவை அனைத்தும் வேதத்தின் மிகப் பழமை வாய்ந்த சத்தியங்களேயாகும்.

**ஆம் இந்த சத்தியங்கள் கருக்குள்ள அரிவாளை போன்று கூர்மையானதாகவும் பிரித்தெடுத்தலை கொண்டுவருகிறதாகவும் உள்ளது.**

இந்த இறுதியான பிரித்தெடுக்கும் வேலையை குறித்த சில விவரங்களை நாம் புரிந்துகொள்ள பின்வரும் வசனத்தை வாசிப்போம்.

**மத்தேயு 13:30**

**“...முதலாவது களைகளைப் பிடுங்கி அவைகளைச் சுட்டெரிக்கிறதற்குக் கட்டுகளாகக் கட்டுங்கள்...”**





**"கட்டுகள்"**

இது தற்கால சத்திய அறிவிப்பானது சத்தியத்தை புறக்கணித்து தங்களுடைய சொந்த


தவறுகளில் நிலைத்திருக்க முயற்சி செய்பவர்கள் மேல் ஏற்படுத்தும் தாக்கத்தை குறிக்கிறது.



**இவர்கள் இந்த தவறான மற்றும் கள்ள உபதேசங்கள் மேல் வைத்திருக்கும் தங்களுடைய விசுவாசத்தை பெலப்படுத்துவதற்கு ஒன்றுசேர்வர்.**

உதாரணமாக,






இந்த "கட்டுகள்" என்பது இன்றைய நாளில் எண்ணிக்கையில் அதிகரிக்கும் சபை பிரிவுகளாகும் இந்த "கட்டுகள்" மீதான "கட்டுதல்" நாளுக்கு நாள் இறுகிக்கொண்டே செல்கிறது. இது வேத வாசிப்பில் இருக்கவேண்டிய கருத்து சுதந்திரம் நாளுக்கு நாள் தடைசெய்யப்பட்டு வருவதால் இந்த "கட்டுகள்" அல்லது சபைகளிலிருந்து ஒருவரை விடுவிப்பது மிகவும் கடினமாகுமளவிற்கு உள்ளது.

**(உதாரணம் – நீங்கள் சபை அல்லது போதகரின் கவனத்திற்கு அப்பாற்ப்பட்டு இதுபோன்ற வேத வகுப்புகளில் பங்கு பெற்றால் – "சபையின் அனுமதியின்றி நீங்கள் எப்படி வேத வகுப்பில் பங்கு பெறலாம் ? போன்ற கேள்விகளுக்கு உள்ளாவீர்கள்.)**

## "சுட்டெரிக்கிறதற்கு"

இது யூத அறுவடையில் நிறைவேறினது போல. இந்த பொய்யான அமைப்புகள் மற்றும் கள்ளஉபதேசங்களை முற்றிலுமாக அழிக்கக்கூடிய தேவனுடைய நியாயத்தீர்ப்புகள் அடையாளமாக குறிக்கும்.

**இது சுவிசேஷ யுகத்தின் இறுதி அம்சமாகும்.**

**ஆனால் அதற்கு முன்பு "கோதுமை" வகுப்பாருக்கு சம்பவிப்பது என்ன ?** நாம் வாசிக்கையில்

**"...கோதுமையையோ என் களஞ்சியத்தில் சேர்த்துவையுங்கள் என்பேன் என்று சொன்னான் என்றார்."**

இது கிறிஸ்தவர்களில் உள்ள இந்த **"கோதுமை"** வகுப்பார் பொய்யான **"நிலத்திலிருந்து"** வேதத்தில் உள்ள சத்தியம் அறிவிக்கப்படுவதின் மூலம் பிரித்தெடுக்கப்படும் விதத்தை குறிக்கிறது.

இது அறுத்து அதே சமயம் பிரிக்கும் **"கருக்கருள்ள அரிவாளாக"** மாறுகிறது.

இங்கு **"களஞ்சியம்"** என்பது **"முதிர்ச்சியடைந்த"** கோதுமை வைக்கப்படும் இடம் அல்லது நிலையை குறிக்கும்.

இங்கு இந்த அடையாளமானது ஆண்டவர் மற்றும் சத்தியத்தில் உள்ள சகோதரர்களுடன் உண்மையான ஒரே சபையில் கூட்டப்படும் சகோதர ஐக்கியம் மற்றும் ஒற்றுமையை குறிக்கும்.

## 1 தீமோத்தேயு 3:15

**".... தேவனுடைய வீட்டிலே நடக்கவேண்டிய வகையை நீ அறியும்படி இவைகளை உனக்கு எழுதுகிறேன்; அந்த வீடு ஜீவனுள்ள தேவனுடைய சபையாய்ச் சத்தியத்துக்குத் தூணும் ஆதாரமுமாயிருக்கிறது."**

ஆம் இந்த சத்தியத்தில் உள்ள சகோதர ஐக்கிய நிலையாகிய **"களஞ்சியத்தில்"** இருவிதமான குணாதிசயங்களுக்கு முன்னேற்றமடைகின்றனர். **"குமாரனுடைய சாயலுக்கு"** பூரணமாக **"முதிர்ச்சி"** அடைந்தவர்கள் – **சிறு மந்தை (லூக்கா 12 : 32)** (அபூரண அல்லது) **"குறைவுப்பட்ட"** முதிர்ச்சியடைந்தவர்கள் – **திரள் கூட்டத்தினர் (வெளிப்படுத்தல் 7 : 9).**

**இந்த முதல் இரு அறுவடைகளும் "மணவாட்டி" வகுப்பார் அல்லது "சபை" அங்கத்தினரை தேர்ந்தெடுத்து கூட்டப்படுவதற்காகும்.**

இதுவே **"பெரிதான இரட்சிப்பு" (எபிரேயர் 2 : 4)** என்றும், அது **"முதலில் யூதருக்கும், பின்பு புறஜாதியாருக்கும்" (ரோமர் 2 : 9, 10)** என்று நாம் வாசிக்கிறோம்.

இப்பொழுது நாம் வேதத்தின் கடைசி அறுவடைக்கு வருவோம்.

## மேசியா யுகத்தின் அறுவடை

**இங்கு நிலமானது முழு மனுக்குலத்தை குறிக்கும்.**



இந்த அறுவடை என்பது "**செம்மறியாடு**" மற்றும் "**வெள்ளாடு**" ஆகியவற்றின் மத்தியில் நடைபெறும் பிரித்தெடுத்தல் என்று அடையாளப்படுத்தப்படுகிறது.

இதை குறித்த விபரங்களை பின்வரும் வசன பகுதியில் வாசிப்போம்,

**மத்தேயு 25:31-46**

**"அன்றியும் மனுஷகுமாரன் தமது மகிமைபொருந்தினவராய்ச் சகல பரிசுத்த தூதரோடுங்கூட வரும்போது, தமது மகிமையுள்ள சிங்காசனத்தின்மேல் வீற்றிருப்பார். அப்பொழுது, சகல ஜனங்களும் அவருக்கு முன்பாகச் சேர்க்கப்படுவார்கள். மேய்ப்பனானவன் செம்மறியாடுகளையும் வெள்ளாடுகளையும் வெவ்வேறாக பிரிக்கிறது போல அவர்களை அவர் பிரித்து, செம்மறியாடுகளைத் தமது வலது பக்கத்திலும், வெள்ளாடுகளைத் தமது இடது பக்கத்திலும் நிறுத்துவார். அப்பொழுது, ராஜா தமது வலது பக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து: வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானதுமுதல் உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுங்கள். பசியாயிருந்தேன், எனக்குப் போஜனங்கொடுத்தீர்கள்; தாகமாயிருந்தேன் என்**

**தாகத்தைத் தீர்த்தீர்கள்; அந்நியனாயிருந்தேன் என்னைச் சேர்த்துக்கொண்டீர்கள்; வஸ்திரமில்லாதிருந்தேன், எனக்கு வஸ்திரங்கொடுத்தீர்கள்; வியாதியாயிருந்தேன், என்னை விசாரிக்க வந்தீர்கள்; காவலிலிருந்தேன், என்னைப் பார்க்கவந்தீர்கள் என்பார். அப்பொழுது, நீதிமான்கள் அவருக்குப் பிரதியுத்தரமாக: ஆண்டவரே, நாங்கள் எப்பொழுது உம்மைப் பசியுள்ளவர்களாகக் கண்டு உமக்குப் போஜனங்கொடுத்தோம்? எப்பொழுது உம்மைத் தாகமுள்ளவர்களாகக் கண்டு உம்முடைய தாகத்தைத் தீர்த்தோம்? எப்பொழுது உம்மை அந்நியராகக்கண்டு உம்மைச் சேர்த்துக்கொண்டோம்? எப்பொழுது உம்மை வஸ்திரமில்லாதவராகக்கண்டு உமக்கு வஸ்திரங்கொடுத்தோம்? எப்பொழுது உம்மை வியாதியுள்ளவராகவும், காவலிலிருக்கிறவராகவும் கண்டு, உம்மிடத்தில் வந்தோம் என்பார்கள். அதற்கு ராஜா பிரதியுத்தரமாக: மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்பார். அப்பொழுது, இடதுபக்கத்தில் நிற்கிறவர்களைப்பார்த்து அவர்: சபிக்கப்பட்டவர்களே, என்னைவிட்டு, பிசாசுக்காகவும் அவன் தூதர்களுக்காகவும் ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிற நித்திய அக்கினியிலே போங்கள். பசியாயிருந்தேன், நீங்கள் எனக்குப் போஜனங்கொடுக்கவில்லை; தாகமாயிருந்தேன் நீங்கள் என் தாகத்தைத் தீர்க்கவில்லை; அந்நியனாயிருந்தேன் நீங்கள் என்னைச் சேர்த்துக்கொள்ளவில்லை; வஸ்திரமில்லாதிருந்தேன், நீங்கள் எனக்கு வஸ்திரங்கொடுக்கவில்லை; வியாதியுள்ளவனாயும் காவலிலடைக்கப்பட்டவனாயும் இருந்தேன், நீங்கள் என்னை விசாரிக்கவரவில்லை என்பார். அப்பொழுது, அவர்களும் அவருக்குப் பிரதியுத்தரமாக: ஆண்டவரே, உம்மைப் பசியுள்ளவராகவும், தாகமுள்ளவராகவும், அந்நியராகவும், வஸ்திரமில்லாதவராகவும், வியாதியுள்ளவராகவும், காவலிலடைக்கப்பட்டவராகவும் நாங்கள் எப்பொழுது கண்டு, உமக்கு உதவிசெய்யாதிருந்தோம் என்பார்கள். அப்பொழுது அவர் அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: மிகவும் சிறியவர்களாகிய இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்யாதிருந்தீர்களோ, அதை எனக்கே செய்யாதிருந்தீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்பார். அந்தப்படி, இவர்கள் நித்திய ஆக்கினை அடையவும், நீதிமான்களோ நித்திய ஜீவனை அடையவும் போவார்கள் என்றார்."**

இது நியாயத்தீர்ப்பின் நாளாகிய – ஆயிரமாண்டில் நடைபெறும் மாபெறும் வேலையை மேற்கோள் காட்ட இயேசு பயன்படுத்தின உவமையாகும்.

இங்கு வசனம் 31 மற்றும் 32 –ல் நியாயத்தீர்ப்பின் சிங்காசனம் மற்றும் மனிதனுக்காக தேவனுடைய தெய்வீக திட்டத்தில் நடக்கும் மூன்றாவது மற்றும் கடைசி “அறுவடை” சித்தரிக்கப்பட்டுள்ளது.

**இங்கு “செம்மறியாடு” மற்றும் “வெள்ளாடு” எனும் அடையாளங்கள் எதை குறிக்கும்?**

## “செம்மறியாடு”



இது முழு மனுக்குலமும் தங்களுடைய **“புரிந்துகொள்ளுதலின் கண்கள் மற்றும் காதுகள்”** ஆண்டவரால் (ஏசாயா 29 : 18) திறக்கப்படும் “அந்நாளில்” மனுக்குலத்திலிருந்து பிரிக்கப்படும் ஒரு வகுப்பாரின் குணலட்சணங்களைக் குறிக்கும். **இந்த வகுப்பார்** தங்களுடைய பாவங்களிலிருந்து மனம்திரும்பி **கிழ்ப்படிதலும் தாழ்மையும்** உள்ளவர்களாக மாறினவராவர்.

## “வெள்ளாடு”



இது மனுக்குலத்தில் உள்ள வேறொரு வகுப்பாரின் குணலட்சணங்களை குறிக்க பயன்படும் அடையாளமாகும் இவர்கள் தேவனுடைய கிருபை மற்றும் இரக்கத்தை அநேக முறை பெற்றிருந்த போதிலும் மனம் திரும்ப மறுத்து தங்களை **மனகடினமுள்ளவர்களாகவும் துணிகரமாக கீழ்ப்படியாமைக்குள்** சென்று தங்களுடைய பாவ வழியை விட மறுத்து சுயநல கிரியைகளில் நிலைநிற்கும் மனிதர்களை குறிப்பதாக வாசிக்கிறோம்.

**ஏசாயா 26:10**

**"துன்மார்க்கனுக்குத் தயை செய்தாலும் நீதியைக் கற்றுக்கொள்ளான்; நீதியுள்ள தேசத்திலும் அவன் அநியாயஞ்செய்து கர்த்தருடைய மகத்துவத்தைக் கவனியாதேபோகிறான்."**

இந்த இருவிதமான குணாதிசயங்களும் வெளிப்படும் காலம் இவ்வுலகத்திற்கான நியாயத்தீர்ப்பின் காலமாகும். ஆம் இந்த

**"நியாயத்தீர்ப்பின் நாள்"** குறித்து பின்வரும் வசனத்தில் பேசப்பட்டுள்ளது.

**அப்போஸ்தலர் 17:31**

**"மேலும் ஒரு நாளைக் குறித்திருக்கிறார்; அதிலே அவர் தாம் நியமித்த மனுஷனைக்கொண்டு, பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார்;...."**

**இந்த காலக்கட்டத்தில் உலகம் "நீதியாய்" (ஏசாயா 26 : 9) நியாயம் தீர்க்கப்படும்.**

இந்த கடைசி **"அறுவடையில்"** நடந்தேறும் பிரித்தெடுத்தலை புரிந்துகொள்வதின் மூலம் நியாயத்தீர்ப்பின் நாள் மற்றும் அதன் விவரங்களை குறித்து நாம் தெளிவாக அறிந்துகொள்ளலாம்.

ஏனென்றால் நியாயத்தீர்ப்பின் நாளானது ஜீவனுக்கு "பாத்திரமும்", "அபாத்திரமுமானவர்களை" நிரூபிக்கும்.

**இவர்கள் "செம்மறியாடு" மற்றும் "வெள்ளாடு" மூலம் இங்கு குறிப்பிடப்படுகிறார்கள்.**

இப்பொழுது நாம் இந்த "அறுவடை" அல்லது "நியாயத்தீர்ப்பின் நாள்" குறித்த விவரங்களை பின்வரும் வசனத்தில் வாசிப்போம்,

**மத்தேயு 25:35-39**

**"பசியாயிருந்தேன், எனக்குப் போஜனங்கொடுத்தீர்கள்; தாகமாயிருந்தேன் என் தாகத்தைத் தீர்த்தீர்கள்; அந்நியனாயிருந்தேன் என்னைச் சேர்த்துக்கொண்டீர்கள்; வஸ்திரமில்லாதிருந்தேன், எனக்கு வஸ்திரங்கொடுத்தீர்கள்; வியாதியாயிருந்தேன், என்னை விசாரிக்க வந்தீர்கள்; காவலிலிருந்தேன், என்னைப் பார்க்கவந்தீர்கள் என்பார். அப்பொழுது, நீதிமான்கள் அவருக்குப் பிரதியுத்தரமாக: ஆண்டவரே, நாங்கள் எப்பொழுது உம்மைப் பசியுள்ளவர்களாகக் கண்டு உமக்குப் போஜனங்கொடுத்தோம்? எப்பொழுது உம்மைத் தாகமுள்ளவர்களாகக் கண்டு உம்முடைய தாகத்தைத் தீர்த்தோம்? எப்பொழுது உம்மை அந்நியராகக்கண்டு உம்மைச் சேர்த்துக்கொண்டோம்? எப்பொழுது உம்மை வஸ்திரமில்லாதவராகக்கண்டு உமக்கு வஸ்திரங்கொடுத்தோம்? எப்பொழுது உம்மை வியாதியுள்ளவராகவும், காவலிலிருக்கிறவராகவும் கண்டு, உம்மிடத்தில் வந்தோம் என்பார்கள்."**

இதற்கான பொருளை காண்பதற்கு முன்பு வேறொரு காரியத்தை குறிக்கும் வசனத்தை நாம் காண்போம்.

**வெளிப்படுத்தல் 20:12**

**"மரித்தோராகிய சிறியோரையும் பெரியோரையும் தேவனுக்கு முன்பாக நிற்கக்கண்டேன்; அப்பொழுது புஸ்தகங்கள் திறக்கப்பட்டன; ஜீவபுஸ்தகம் என்னும் வேறொரு புஸ்தகமும் திறக்கப்பட்டது; அப்பொழுது அந்தப் புஸ்தகங்களில் எழுதப்பட்டவைகளின்படியே மரித்தோர் தங்கள் தங்கள் கிரியைகளுக்குத்தக்கதாக நியாயத்தீர்ப்படைந்தார்கள்."**

இங்கு நியாயத்தீர்ப்புக்காக குறிப்பிடப்பட்டுள்ள **"கிரியைகள்"** **மத்தேயு 25:35 - 39**-ம் வசனங்களில் தெளிவுப்படுத்தப்பட்டுள்ளது.

ஆனால் இந்த "கிரியைகள்" குறித்த விளக்கத்தை காணும் முன்பு இந்த வசனத்தை நாம் முதலில் புரிந்து கொள்வது அவசியம்.

இந்த வசனம் **ரோம கத்தோலிக்கர்களால் நேரடியாக புரிந்து** கொள்ளப்பட்டு ஒருவருடைய மரணத்திற்கு பின்பு அவருக்கு தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்பாக **"துரிதமாக"** நடக்கும் நியாயத்தீர்ப்பை குறிப்பதாக கருதப்படுகிறது. அப்பொழுது திறக்கப்படும் **"புஸ்தகங்கள்"** ஒருவருடைய வாழ்வில் சம்பவிப்பவைகளை பதிவுசெய்யும் கணக்கு புத்தகமாக கருதப்படுகிறது.

## இது உண்மையா?

பின்வரும் வசனத்தில் வாசிக்கிறபடி நாம் நிதானிக்கையில்,

**2 தீமோத்தேயு 2:15** - **"....சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும்..."**

....வெளிப்படுத்தின புத்தகமானது முழுவதும் அடையாளபாஷையில் எழுதப்பட்டுள்ளதை நாம் முதலில் உணர்கிறோம். ஆகையால் இந்த வசனத்தில் உள்ள அடையாளங்களுக்கான பொருளை நாம் காண்போம்.

**"மரித்தோர்"**

இது இரண்டாம் உலகத்தை முடிவுக்கு கொண்டுவருகிற **"மகா உபத்திரவ காலத்தின்"** **(மத்தேயு 24:21,22)** இறுதியில் வாழ்ந்துகொண்டிருக்கும் உலக ஜனங்களை குறிக்கும். இவர்கள்

இயேசுவின் மூலம்... **“மரித்தோர்” (லூக்கா 9:60)** என்று குறிக்கப்படுகிறார்கள்.



ஆம் இரண்டாம் உலகம் முடிவுக்கு வந்தாலும் அது மனுக்குலத்தினுடைய முடிவாயிராமல் அங்கும் அநேகர் **“உயிரோடிருப்பார்கள்”** என்று நாம் வாசிக்கிறோம்.


**சகரியா 14:16**

**"பின்பு, எருசலேமுக்கு விரோதமாக வந்திருந்த எல்லா ஜாதிகளிலும் மீதியான யாவரும் சேனைகளின் கர்த்தராகிய ராஜாவைத் தொழுதுகொள்ளும்படிக்கும், கூடாரப்பண்டிகையை ஆசரிக்கும்படிக்கும், வருஷாவருஷம் வருவார்கள்."**

**“சிங்காசனத்திற்கு முன்பாக நிற்பார்கள்”**

இது உலகத்தின் நியாயத்தீர்ப்பு ஆரம்பிக்கப்பட்டு நடந்துகொண்டிருக்கும் உண்மையை அடையாளமாக குறிப்பதாகும் ஆம் அப்பொழுது உலகத்தை நியாயத்தீர்க்கும் நாள் துவங்கியிருக்கும்.






## "புத்தகங்கள்"

இது "கர்த்தருடைய புத்தகம்" **(ஏசாயா 34:16)** என்றழைக்கப்படும் "புத்தகமாகிய" **(ஏசாயா 29 : 18)** – வேதம் மற்றும் **அதன் 66 புத்தகங்களை** குறிப்பதாகும். ஆம் இந்த "புத்தகங்கள்" தேவனுடைய வார்த்தைகளை உள்ளடக்கிய 66 புத்தகங்களேயாகும்.

## "திறக்கப்பட்டது"



இது வேதம் பழக்கத்தில் இல்லாத பாஷைகளிலும், உவமை மற்றும் கருகலான பாஷைகளிலும் **(மத்தேயு 13:13) "பூட்டப்பட்ட" நிலையில்** இருப்பது மாற்றப்பட்டு வேதம் எல்லோரும் புரிந்து கொள்ளும்படிக்கு மாற்றப்பட்டிருக்கும். உலகம் கர்த்தரை பற்றி அறியும் அறிவில் நிறைந்திருக்கும் காலத்தில் (ஆபகூக் 2 : 14) வெளியாக்கப்பட்டு தெளிவாக விளக்கப்படுவதை குறிக்கும்.

ஆம் மனுக்குலத்தின் புரிந்துகொள்ளுதலுக்கான **"கண்கள்"** தேவன் **"மாம்சமான யாவர் மீதும் தம்முடைய ஆவியை ஊற்றுவதினால்"** வேதத்தில் உள்ள சத்தியங்களை புரிந்துகொள்வதற்கு திறக்கப்பட்டிருக்கும்.

## "ஜீவபுஸ்தகம் என்னும் வேறொரு புஸ்தகமும் திறக்கப்பட்டது"

இங்கு அடையாளமாக சொல்லப்பட்டிருக்கும் "ஜீவ புத்தகம்" நியாயத்தீர்ப்பின் நாளில் ஒவ்வொருவருடைய ஜீவனுக்கு ஏதுவான கிரியைகள் பதிவுசெய்யப்படுவதை குறிக்கும்.

அதாவது மனுக்குலத்தில் உள்ள ஜனங்களின் "நித்திய ஜீவனுக்கு" ஏதுவான தகுதியுள்ள கிரியைகள் பதிவுசெய்யப்படுவதை அடையாளமாக குறிப்பிடும் முறையாகும். இது இயேசு குறிப்பிடுகிறதும். சுவிசேஷ யுகத்தில் தகுதிப்படும் சபை வகுப்பாரின்

கிரியைகளை பதிவு செய்துள்ள புத்தகத்தை ஒத்து இருக்கிறதை வாசிக்கிறோம்.

**வெளிப்படுத்தல் 3:5**

**"ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனுக்கு வெண்வஸ்திரம் தரிப்பிக்கப்படும்; ஜீவபுஸ்தகத்திலிருந்து அவனுடைய நாமத்தை நான் கிறுக்கிப்போடாமல், என் பிதா முன்பாகவும் அவருடைய தூதர் முன்பாகவும் அவன் நாமத்தை அறிக்கையிடுவேன்."**

**குறிப்பு** – இங்கு "திறக்கப்பட்டது" என்ற வார்த்தை அப்பொழுது துவங்கிய வேலையை குறிக்கிறது.

**"அப்பொழுது அந்தப் புஸ்தகங்களில் எழுதப்பட்டவைகளின்படியே மரித்தோர் தங்கள் தங்கள் கிரியைகளுக்குத்தக்கதாக நியாயத்தீர்ப்படைந்தார்கள்."**

இது நியாயத்தீர்ப்பின் வேலையை தெளிவாக குறிக்கிறது. மேலும் "அந்த புஸ்தகத்தில் எழுதப்பட்டவைகளை" – அல்லது தேவனுடைய வார்த்தைகளில் உள்ள சத்தியத்தை புரிந்த பின்பு ஜனங்கள் அவர்களுடைய "கிரியைகளின்படி" நியாயந்தீர்க்கப்படுவதை காண்பிக்கிறது.

**சங்கீதம் 96:13**

**"அவர் வருகிறார், அவர் பூமியை நியாயந்தீர்க்க வருகிறார்; அவர் பூலோகத்தை நீதியோடும், ஜனங்களைச் சத்தியத்தோடும் நியாயந்தீர்ப்பார்."**

மேலும் இப்பொழுது "கிரியைகள்" என்பது எதை குறிக்கிறது மத்தேயு 25:35-39 ம் வசனங்களிருந்து காணலாம்.

இந்த வசனபகுதி நேரடியாக பேசப்படுகிற பகுதியல்ல. மாறாக இயேசு பேசின உவமை என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும்.

இப்பொழுது அந்த உவமையின் பொருளை நிதானிக்கையில்,

**"..பசியாயிருந்தேன் ....தாகமாயிருந்தேன்.."**

நாம் அறிந்திருக்கிறபடி தேவனுடைய ராஜ்யத்திலும் நியாயத்தீர்ப்பின் நாளிலும் ஆகாரம் மற்றும் தண்ணீருக்கு நிச்சயமாக குறைவு இருக்காது.

இதன் மூலம் “தாகம்” மற்றும் “பசி” என்பது ஆவிக்குரிய ஆகாரம் மற்றும் ஆவிக்குரிய தண்ணீராகிய தேவனுடைய வார்த்தையை அடையாளப்படுத்துகிறது. இதை பின்வரும் வசனத்தில் வாசிக்கிறோம்.

**எரேமியா 15:16**

**"உம்முடைய வார்த்தைகள் கிடைத்தவுடனே அவைகளை உட்கொண்டேன்; உம்முடைய வார்த்தைகள் எனக்குச் சந்தோஷமும், என் இருதயத்துக்கு மகிழ்ச்சியுமாயிருந்தது;.."**

**வெளிப்படுத்தல் 22:17**

**"ஆவியும் மணவாட்டியும் வா என்கிறார்கள்; கேட்கிறவனும் வா என்பானாக; தாகமாயிருக்கிறவன் வரக்கடவன்; விருப்பமுள்ளவன் ஜீவத்தண்ணீரை இலவசமாய் வாங்கிக்கொள்ளக்கடவன்."**

பூமியானது கர்த்தரை அறிகிற அறிவினால் தானாக நிறைந்திருக்கும் என்று அறிந்திருக்கையில் தேவனுடைய ராஜ்யத்தில் **“ஆகாரமும்”**, **“தண்ணீருமாகிய”** தேவனுடைய வார்த்தையை மற்றவர்களுக்கு தரக்கூடிய வாய்ப்பு கிடைப்பதை குறித்து ஒருவர் ஆச்சரியப்படலாம்.



இதற்கான பதில் என்னவெனில் அப்பொழுதும் கூட தனிப்பட்ட நபர்களுக்கு இந்த உதவியை செய்வதற்கான வாய்ப்பை தேவன் தருவார் என்பதையே வெளிப்படுத்தல் 22:17-ம் வசனத்தில் வாசிக்கிறோம்.


இந்த “கிரியைகளை” குறித்து தொடர்ந்து நாம் வாசிப்பது என்னவெனில்,

**“..அந்நியனாயிருந்தேன் என்னைச் சேர்த்துக்கொண்டீர்கள்..”**

ஆம் மனுக்குலத்தில் உள்ள **“செம்மறியாடு”** வகுப்பார் தங்களுடைய நெருங்கிய உறவினர்கள் மற்றும் குடும்பத்தாருக்கு மாத்திரம் ஊழியம் செய்யும் வைராக்கியத்தினால் நிறப்பப்பட்டவர்களாக இல்லாமல்,



அதையும் தாண்டி தாங்கள் அறிந்திராத மற்றவர்களாகிய – **“அந்நியர்களுக்கும்”** ஊழியம் செய்பவர்களாக இருப்பார்கள் ஆம் அவர்களுடைய அன்பு நிறைந்த உள்ளமானது தங்களுடைய குடும்பத்தையும் உறவினர்களையும் மாத்திரம் உபசரிக்கக்கூடியதாக இல்லாமல் தாங்கள் அறிந்திராத அந்நியர்களையும் உபசரிக்கும் அளவிற்கு பரந்த உள்ளமாக இருக்கும்.



**“..வஸ்திரமில்லாதிருந்தேன் எனக்கு வஸ்திரங்கொடுத்தீர்கள்..”**

இது சொல்லர்த்தமான நிர்வாணத்தை குறிக்க வாய்ப்பில்லை. ஏனென்றால் தேவனுடைய ராஜ்யத்தில் அப்படிப்பட்ட சூழ்நிலை இருக்கமுடியாது.



இந்த **"நிர்வாணம்"** என்பது இயேசு கொடுத்த ஈடுபலியின் விலைக்கிரையத்தினால் பாவங்கள் மூடப்படாத நிலையில் இருக்கும் உலகத்தில் உள்ள பாவிகளின் நிலையை குறிக்கும். ஆம் **இந்துக்கள், இஸ்லாமியர்கள் மற்றும் கடவுள் நம்பிக்கையற்றவர்கள்** போன்றோருக்கு பாவங்களுக்கான ஒரே **"மூடலை"** காண்பிப்பதற்கான ஒரு வாய்ப்பு அங்கு உண்டாயிருக்கும்.

## "..வியாதியாயிருந்தேன் என்னை விசாரிக்க வந்தீர்கள்.."



இங்கும் இந்த வியாதியானது சொல்லர்த்தமான வியாதியை குறிப்பிடாமல் இருப்பதை பின்வரும் வசனத்தில் நாம் வாசிக்கிறோம்

**ஏசாயா 33:24 - "வியாதிப்பட்டிருக்கிறேன் என்று நகரவாசிகள் சொல்லுவதில்லை, அதில் வாசமாயிருக்கிற ஜனத்தின் அக்கிரமம் மன்னிக்கப்பட்டிருக்கும்."**

இது சொல்லர்த்தமான வியாதியை குறிப்பிடாமல் கல்லறையிலிருந்து விழித்தெழுந்து திரும்புகிறவர்களின் **"பாவ நிலையை"** – பாவத்தினால் வியாதிப்பட்டிருப்பதை குறிக்கும்.

மேலும் இங்கு **"விசாரிக்க வந்தவர்கள்"** என்பது ஊக்குவித்தல் மற்றும் ஆலோசனை வழியாக மனுக்குலத்தை பாவ "வழிகளிலிருந்து" அன்பான பராமரிப்பு மற்றும் ஊழியத்தின் மூலம் வெளியே வழிநடத்த கிடைக்கும் வாய்ப்புகளை குறிக்கும். உண்மையில் இப்படிப்பட்ட "விசாரிக்கும்" வாய்ப்புகள் அப்பொழுது அதிகமாக காணப்படும்.

## "..காவலிலிருந்தேன் என்னைப் பார்க்கவந்தீர்கள் என்பார்.."

ஆம் இது மாபெரும் **"காவற்கூடமாகிய"** கல்லறையை – **"பாதாளம் / குழி"** எனப்படும் நரகத்தை குறிக்கும்.

ராஜ்யத்தில் இதை குறித்து நாம் வாசிக்கும் பொழுது,

**"...பிரேத குழியில் உள்ள அனைவரும் அவருடைய சத்தத்தை கேட்கும் காலம் வரும்..." (யோவான் 5 : 28, 29)**

ஆம் மரித்தோர் கல்லறைகளிலிருந்து விழித்தெழுந்து வருகிறதை இது குறிக்கிறது.

### "..என்னைப் பார்க்கவந்தீர்கள்.."

ஏற்கனவே நாம் பார்த்த பாடத்தில் மரித்தோரின் உயிர்த்தெழுதல், அவர்களுக்காக ஏறெடுக்கப்பட்ட அநேகருடைய ஜெபத்திற்கான விடையாக நடக்கும் என்றும், அது தேவன் மீதான அவர்களுடைய விசுவாசம் உறுதிப்படுவதற்கு ஏதுவாக அமையும் என்றும் கண்டோம்.



ஆனால், அநேகர் தங்களுடைய உயிர்தெழுதலுக்காக ஜெபிப்பதற்கு உறவினர்களோ, குடும்பத்தினரோ இல்லாமல் மரித்துள்ளதை நாம் அறிவோம்.

**உதாரணம்** – அநாதைகள், வீதியோர ஜனங்கள், மனநிலை பாதிக்கப்பட்டவர்கள், வழிப்போக்கர்கள்...மற்றும் பலர்.

இப்படிப்பட்டவர்கள் கல்லறைகளிலிருந்து உயிர்த்து வருவதற்காக அவர்களை நினைவுக்கூர்ந்து, அவர்களுக்காக ஜெபித்து, அவர்களுக்கு ஊழியம் செய்யும் **"செம்மறியாடு" வகுப்பார் அநேகர் அங்கு இருப்பார்கள்.**



இப்படிப்பட்ட **"கிரியைகள்"** ராஜ்யத்தில் சக மனிதர்களுக்கு செய்யப்படும் அன்பான அதேசமயம் வைராக்கியமான கிரியைகளாகும்.

இந்த **"செம்மறியாடு"** வகுப்பை சேர்ந்தவர்கள் தங்களால் இயன்ற எல்லா வழிகளிலும் மனுக்குலத்தின் ஜனங்களுக்கு ஊழியம் செய்யுவும், அந்த ஊழியம் தெய்வீக கற்பனைகளுக்கு உட்பட்டதாக

இருக்கும்படி வகைதேடுவதை குறித்து நாம் வாசிக்கிறோம்.

**மாற்கு 12:29:31**

**"இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: கற்பனைகளிலெல்லாம் பிரதான கற்பனை எதுவென்றால்: இஸ்ரவேலே கேள், நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர். உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு மனதோடும், உன் முழுப் பலத்தோடும் அன்புகூருவாயாக என்பதே பிரதான கற்பனை. இதற்கு ஒப்பாயிருக்கிற இரண்டாம் கற்பனை என்னவென்றால்: உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோல் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்பதே; இவைகளிலும் பெரிய கற்பனை வேறொன்றுமில்லை என்றார்."**

இவ்விதமாக **"செம்மறியாடு"** வகுப்பார் இராஜாவின் **"வலது பக்கமாக" (மத்தேயு 25 : 33)** நீதியின் பாதையிலும் அவருடைய பட்சத்திலும் சேர்க்கப்படுவார்கள்.

ஆனால் **"வெள்ளாடு"** வகுப்பார் இராஜாவின் "இடதுபக்கமாகவும்", அநீதி மற்றும் தயவற்ற ஸ்தானத்திற்கு சேர்க்கப்படுவார்கள் **(ஏசாயா 26 : 10).**





**இது 1000 வருடம் முழுவதுமாக தொடந்து நிறைவேறும் திட்டமாக இருக்கும்.**

மேலும் எல்லோரும் மனம்திரும்பி, சீர்பொருந்தப்பண்ணுவதற்கான வாய்ப்பை தேவனிடமிருந்து பெற்றுக்கொள்வதை பின்வரும் வசனத்தில் வாசிக்கிறோம்.

**ஏசாயா 65:20**

**"அங்கே இனி அற்ப ஆயுசுள்ள பாலகனும், தன் நாட்கள் பூரணமாகாத கிழவனும் உண்டாயிரார்கள்; நூறு வயதுசென்று மரிக்கிறவனும் வாலிபனென்று எண்ணப்படுவான்; நூறு வயதுள்ளவனாகிய பாவியோ சபிக்கப்படுவான்."**

ஆம் இது அதிகபட்ச பயிற்சி காலமாகிய நூறு வருடத்தை குறிக்கிறது துணிகரமாக பாவம் செய்யும் பாவிகள் இந்த நூறு வருடத்தை கடக்கமாட்டார்கள். ஆனால் தேவனிடமிருந்து வரும் “சாபமாகிய” – மரணத்தை இரண்டாம் முறையாக அடைவார்கள். (ரோமர் 6 : 23).

இவ்வகுப்பார் மற்றும் அவர்களை குறித்த விபரங்களை வெளிப்படுத்தின விசேஷம் 21 : 8-ல் வாசிக்கிறோம். இவ்விதமாக இந்த மூன்றாவது “அறுவடை” இறுதியாக முடிவதை குறித்து வாசிக்கையில்,

**மத்தேயு 25:34**

**"அப்பொழுது, ராஜா தமது வலது பக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து: வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானதுமுதல் உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுங்கள்."**



இப்படியாக **"செம்மறி ஆடு"** வகுப்பினர் இந்த பூமியில் **"தேவனுடைய ராஜ்யத்தையும்"** அதில் நித்திய ஜீவனையும் பெறுவார்கள்.

**சங்கீதம் 37:29**

**"நீதிமான்கள் பூமியைச் சுதந்தரித்துக்கொண்டு என்றைக்கும் அதிலே வாசமாயிருப்பார்கள்."**

.....அதே சமயம் **"நித்திய ஜீவனையும்"** சுதந்தரிப்பார்கள் என்று வாசிக்கிறோம்.

**மத்தேயு 25:46**

**"அந்தப்படி இவர்கள் நித்திய ஆக்கினையை அடையவும் நீதிமான்களோ நித்திய ஜீவனை அடையவும் போவார்கள் என்றார்"**

மேலும் "வெள்ளாடு" குறித்து நாம் வாசிக்கையில்,

**மத்தேயு 25:41**

**"அப்பொழுது, இடதுபக்கத்தில் நிற்கிறவர்களைப்பார்த்து அவர்: சபிக்கப்பட்டவர்களே, என்னைவிட்டு, பிசாசுக்காகவும் அவன் தூதர்களுக்காகவும் ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிற நித்திய அக்கினியிலே போங்கள்."**

ஆம் **"வெள்ளாடு"** வகுப்பினர் **"நித்திய அக்கினியாகிய"** வசனம் 46–ல் **"நித்திய ஆக்கினையை"** சென்றடைவார்கள் என்று வாசிக்கிறோம்.

**"...நித்திய ஆக்கினையை அடையவும்..."**

**இது எதை குறிக்கும் ? இதற்கு என்ன பொருள் ?**

இங்கு **"வெள்ளாடு"** என்பது அடையாளமாக சொல்லப்பட்டிருப்பது போல. **"நித்திய அக்கினியும்"**, **"பதர்"** மற்றும் **"களைகள்"** விஷயத்தில் பார்த்ததுபோல அழிவிற்கு அடையாளமாக இருக்கிறது.

ஆனால் இங்கு காணப்படும் ஒரு வேறுபாடு என்னவெனில் – முந்தைய இரு அறுவடைகளிலும் "பதர்" மற்றும் "களைகளுக்கு"

நேர்ந்ததுபோல இல்லாமல் **இது நித்தியமும் நிரந்தரமுமான அழிவாக இருக்கும்.**


ஆம் இதுவே **இறுதியான நியாயத்தீர்ப்பும் அழிவுமாக** இருந்து......**நிரந்தரமும் நித்தியமுமான – இரண்டாம் மரணத்தை** குறிக்கிறது.

**இவ்விதமாக மனிதனுக்கான தேவனுடைய தெய்வீக திட்டத்தில் – மூன்றாவதும் இறுதியுமான "அறுவடையின்" முடிவு இருக்கும்.**

அதன் பின்பு பரிபூரணமான மனித ஜாதி பூரணமான பூமியில் நித்தியமான ஜீவனுக்குள் பிரவேசிப்பார்கள்.

**...ஆமென்...**

For Private Circulation Only




NOT FOR SALE

For more Subjects contact: MESSENGERS OF CHRIST E-mail: thekingdom1_6@yahoo.com